## வரங்களா, திறன்களா?

வாசிக்க: 1 கொரிந்தியர் 12:1-11

***"எந்த நல்ல ஈவும் பூரணமான எந்த வரமும் விண்ணகத்திலுள்ள ஒளியின் பிறப்பிடமாகியத் திருத்தந்தையிடமிருந்தே வருகின்றது" (யாக் 1:17)***

திருமறையில் தரப்பட்டுள்ள ஆன்மீக வரங்களின் பட்டியல்களில் ஒன்றும் முழுமையானதல்ல, எடுத்துக்காட்டுகளாகத்தான் தரப்பட்டவை. நேரடியாகச் சொல்லப்படாத வரங்கள் எத்தனையோ உண்டு. இதோ சில எடுத்துக்காட்டுகள்—



பிறந்து ஆறு வாரங்களில் காய்ச்சலினால் பார்வையிழந்த பேன்னி கிராஸ்பி அம்மையார் (1823-1915) 92 வயதில் இறந்தார்கள். ஒருநாளும் பழமையாகாத ஆயிரக்கணக்கான பாடல்களை இயற்றக் கடவுள் அவர்களை அற்புதமாய்ப் பயன்படுத்தினார் "Blessed assurance, Jesus is mine" என்பது அவர்களது பாடல்களில் ஒன்று. தமது புகழைப் பாடுவதிலும், பறைசாற்றுவதிலும் இறைவன் கலை உணர்வை வெகுவாய்ப் பயன்படுத்திவந்திருக்கிறார். ஆராதனைக்கூடத்திற்கு எல்லாவித நுண்ணிய வேலைகளையும் நுட்பமாய்ச் செய்கிறதற்கு வேண்டிய ஞானம், அறிவுக்கூர்மை, தொழில் திறமை அனைத்தும் உண்டாகுமாறு பெசலெயேலைக் கடவுள் தமது ஆவியினால் நிரப்பினார் (யாத் 31:1-5). நண்பர் சுவிசேஷ ஜெபக் குழுவின் சகோதரன் நவநீதர் இதற்கோர் நவீன எடுத்துக்காட்டு. அவரது ஓவியங்கள் அநேகரை மிஷனரிக் களங்களுக்குத் துரத்திவிட்டுள்ளன!

அகத்தூண்டுதலான பாடல்களை இயற்றவும், குயில்போல் பாடவும், இனிமையாய் இசைக்கவும் நம் நண்பர் பலருக்குக் கடவுள் வரமளித்துள்ளார். இவ்வித அசாதாரண வரம் பெற்றதில் தாவீது ஒருவன். அவனை "அபிஷேகம் பெற்று... இன்பமாய்ப் பாடின தாவீது" என்றழைக்கிறது திருமறை (2 சாமு 23:1). மிஷனரிப் பணியுலகில் காலம் போற்றும் பாடல்களை இயற்றும் வரம்பெற்றவர் அண்ணன் எமில். மிஷனரிகளும் வேத மொழியாக்கர்களும் புதிய மொழிகளைக் குறுகிய காலத்தில் கற்றுக்கொள்ள முடிந்தது இறைவன் அருளும் வரத்தினாலேயே. இல்லையேல், அத்தனை மொழிகளில் வேதத்தை மொழிபெயர்க்க வில்லியம் கேரிக்கு (1761-1834) எவ்விதம் முடிந்திருக்கும்?

மேற்கூறியவைகளை வரங்கள் என்று வர்ணிப்பதா, அல்லது திறமைகள், தாலந்துகள் என்று விளக்குவதா? பாடுதல், வரைதல், மொழிபயிலுதல் போன்றவையெல்லாம் திறமைகள்தானே அன்றி வரங்களல்ல என ஒருவேளை சிலர் வாதாடலாம். ஆனால் திறமைகளையும் கொடுப்பது இறைவன்தானே. அவர் கொடையாய்த் தரும் எதுவும் திறமை அல்லது வரம் எனப்படும். "உன்னைச் சிறந்தவனாக்குகிறவர் யார்?" கடவுள்தானே! (1 கொரி 4:7). இயல், இசை, நாடகம் ஆகியவற்றில் கிறிஸ்தவப்பணிவுலகு பின்தங்கியிருப்பதற்கு முக்கியக் காரணம் வரம் என்றவுடன் அந்நிய பாஷையையும் அற்புத அடையாளங்களையும் மட்டுமே நினைப்பதுதான். இன்று வெளிவரும் பாடல்கள் பெரும்பாலும் செய்யுள் நடையிலல்ல, உரைநடை யிலேயே இருக்கின்றன! தமிழ்த் திருச்சபைக்கு இனி தஞ்சை வேதநாயகம் சாஸ்திரியார்களும் தரங்கம்பாடி ஞா. சாமுவேல் ஐயர்களும் எழும்பமாட்டார்களா?

*இந்தியாவின் அருங்கலைகள் இணைந்திங்கு சுவை ததும்பும்*
*இயல் இசை நாடகத் தமிழ் மணம் ஓங்கவே! (கீர்த்தனை)*